## வர்த்தகமும் சுற்றுலாவும்

### பொதுவான வர்த்தக நிலுவை

வெளிநாட்டு வர்த்தகத் துறையின் செயலாற்றும் 1986 இல் தொடர்ந்தும் சாதகமற்றதாக இருந்தது. இவ்வாண்டில் ஏற்றுமதிகளின் பெறுமதி 21 சதவீத திஞல் வீழ்ச்சியடைந்தது. எனினும் இறக்குமதிகள் மீதான செலவினம் 15 சதத் வீதத்திஞல் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக வர்த்தகப் பற்ருக்குறை 1985 இன் பற்ருக்குறையுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்திஞல் சுருங்கியது.

ஏற்றுமதித் துறையின் ஏமாற்றத்திற்குரிய செயலாற்றத்திற்கு அனைத்து வேளாண்மை ஏற்றுமதிகளினதும் அதாவது தேயிலை, இறப்பர், தெங்கு, சிறு வேளாண்மைப் பயிர்கள் என்பனவற்றின் ஏற்றுமதிப் பெறுமதியில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியே காரணமாகும். பெற்ரோலிய ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வரவுகளின் கடுமையான வீழ்ச்சியிஞல் பலவீனமான இச் செயலாற்றம் மேலும் மோசமடைந்தது. பரந்த அளவிலான கைத்தொழில் ஏற்றுமதிகளி லிருந்து கிடைத்த வரவுகள் (பெற்ரோலிய உற்பத்திகள் நீங்கலாக) கணிசமாக அதிகரித்தபோதிலும் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த மிகவும் குறைவான வரவுகள் இவ்வதிகரிப்பினை எதிரீடு செய்வதற்குப் போதுமாக இருக்கவில்லை.

1986 இன் தற்காலிக சுங்கத் தரவுகளின்படி இறக்குமதிகள் மீதான செலவு ரூ. 513,320 இலட்சமாகவும் (சிஎஉ 15,600 இலட்சம்), ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 340,920 இலட்சமாகவும் (சிஎஉ 10,360 இலட்சம்) அமைந்து ரூ. 172,390 இலட்சம் கொண்ட (சிஎஉ 5,240 இலட்சம்) வர்த்தக பற்ருக்குறையினை எற்படுத் தியது. இது 1985 இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 140,340 இலட்சம் கொண்ட (சிஎஉ 5,080 இலட்சம்) பற்ருக் குறையுடன் ஒப்பிடுகையில் சிஎஉ நியதிகளில் 3 சத

அட்டவணை 1.28

**வர்த்தகநிலுவை 1984—1986**

பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (ஆ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1984 ... | 46,913 (1,799) | 47,541 (1,823) | 37,006 (1,419) | 37,347 (1,432) | —9,908 (—380) | —10,194 (—391) |
| 1985 ... | 49,069 (1,776) | 54,049 (1,956) | 35,035 (1,268) | 36,207 (1,311) | —14,034 (—508) | —17,843 (—646) |
| 1986 (இ) ... | 51,332 (1,560) | 54,609 (1,660) | 34,092 (1,036) | 34,072 (1,036) | —17,239 (—524) | —20,537 (—624) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(ஆ) மீள் ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது.
(இ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முக்கிய வளமாக்கி இறக்குமதி யாளர்களும்,
வரையறுக்கப்பட்ட ஏயர் லங்கா,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

வீதம் கூடுதலானதாகும். பதிவுசெய்தல் தொடர்பாக ஏற்படும் காலம் தாழ்த்தியமை மற்றும் பதிவுசெய்தல்போன்ற காரணிகளுக்கேற்ப சுங்கத்தரவுகளைச் சீராக்கம் செய்யுமிடத்து மொத்த இறக்குமதிகள் ரூபா. 546,090 இலட்சமாக (சிஎஉ 16,600 இலட்சம்) அமைந்த வேளையில் ஏற்றுமதிகள் ரூ. 340, 720 இலட்சமாக (சிஎஉ 10,360 இலட்சம்) அமைந்தன. இதனால் ஏற்படும் சீராக்கப்பட்ட வர்த்தகக் குறையான ரூ. 205,370 இலட்சம் (சிஎஉ 6,240 இலட்சம்) முந்திய ஆண்டின் சீராக்கப்பட்ட குறையான ரூ. 178,430 இலட்சத்துடன் (சிஎஉ 6,460 இலட்சம்) ஒப்பிட்டுகையில் சிஎஉ நியதிகளில் 3 சதவீதம் குறைவானதாகும்.

எல்லா வேளாண்மை உற்பத்திகளினதும் சராசரி ஏற்றுமதி விலைகள் முந்திய ஆண்டினுடன் ஒப்பிடுகையில் 1986 இல் குறைவாக விளங்கின. இறக்குமதிப் பக்கத்தில் பெற்றோலிய விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்துபெருந் தொகையான அடிப்படை உணவு விடயங்களின் விலைகளும் குறைவடைந்த போதிலும் இதனால் ஏற்படும் சாதகமான தாக்கம் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக நாட்டின் வர்த்தக மாற்று வீதத்தினைத் தற்போதுள்ள பாதகமான நிலையிலிருந்து தவிர்ப்பதற்குத் தேவையானதைவிடக் குறைவாகவே இருந்தது. ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான ஏற்றுமதி விலைகள் இவ்வாண்டில் 11சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான இறக்குமதி விலைகள் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. இவ்வாறாக விலைகளில் ஏற்பட்ட தொடர்பான அசைவுகள் வர்த்தக மாற்றுவீதத்தைக் குறைவடையச் செய்ததுடன் சுட்டெண்ணும் 1985 இன் 108 இல் இருந்து 1986 இல் 102 இற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.29

## வெளிநாட்டு வர்த்தகம் 1979—1986

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | சுட்டெண்கள் 1981=100 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | வர்த்தக மாற்று விகிதப் |
| | ஏற்றுமதிகள்* (க. எ. பெ.) | இறக்குமதிகள்* (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்குமதிகள் | |
| 1979 .. | 15,286 | 22,560 | — 7,275 | 89 | 85 | 82 | 76 | 109 |
| 1980 ... | 17,595 | 33,942 | —16,347 | 95 | 107 | 92 | 90 | 102 |
| 1981 ... | 21,043 | 36,583 | —15,540 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1982 ... | 21,454 | 41,946 | —20,492 | 105 | 98 | 98 | 107 | 92 |
| 1983 ... | 25,096 | 45,558 | —20,461 | 99 | 108 | 125 | 110 | 113 |
| 1984 ... | 37,347 | 47,541 | —10,194 | 116 | 109 | 160 | 119 | 134 |
| 1985 ... | 36,207 | 54,049 | —17,843 | 120 | 102 | 142 | 132 | 108 |
| 1986(அ) | 34,609 | 54.609 | —20,537 | 128 | 114 | 126 | 124 | 102 |

(அ) தற்காலிகமானவை.
* 1980 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப்பட்டவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

**ஏற்றுமதிகள்**

சீராக்கம் செய்யப்பட்ட தரவுகளின்படி 1986 இல் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் ரூ. 340,720 இலட்சமாக (சிஎஉ 10,360 இலட்சம்) அமைந்து 1985 இன் ரூ. 362,070 இலட்சத்துடன் (சிஎஉ 13,110 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூபா நியதிகளில் 6 சதவீதமும் சிஎஉ நியதிகளில் 21 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளைக் காட்டின. இது 1984 உடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருவாய்கள் ரூபா நியதிகளில் 3 சதவீதத்தினாலும் சிஎஉ நியதிகளில் 8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்த முந்திய ஆண்டின் செயலாற்றத்துடன் ஓரளவுக்கு ஒத்ததாகக் காணப்பட்டது. 1986 இன் ஏற்றுமதி வரவுகளில் எற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து கிடைந்த வரவுகள் 1985 இன் ரூ. 190,260 இலட்சத்திலிருந்து (சிஎஉ 6,890 இலட்சம்) ரூ. 157,640 இலட்சத்திற்கு (சிஎஉ 4,790 இலட்சம்) வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருவாய்களும் சிஎஉ நியதிகளில் வீழ்ச்சியடைந்தன. இது பெரும்பாலும் பெற்றோலிய ஏற்றுமதிகள் 1985 இல் சிஎஉ 5,170 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 4,830 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்து கணிசமாகக் குறைவடைந்தமையினால் எற்பட்டதாகும். எனினும், ரூபா நியதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகள் ரூ. 142,950 இலட்சத்திலிருந்து ரூ. 158,780 இலட்சத்திற்கு அதிகரித்து கடந்த இரு ஆண்டு காலத்தினை விட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1986 இல் கனிப்பொருள் ஏற்றுமதிகள் ரூ. 11,820 இலட்சமாக (சிஎஉ 360 இலட்சம்) அமைந்து 37 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் (சிஎஉ நியதிகளில் 15 சதவீதம்) மிகவும் குறிப்பிடத்தக்கவோர் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. ஆனால் மொத்த ஏற்றுமதிகளில் இது சிறு பங்கினை வகிப்பதனால் பொதுவான ஏற்றுமதித் துறையில் இதன்பங்கு மிகவும் சிறிதாக விளங்கியது.

1986 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் காணப்பட்ட மிகவும் குழப்பமான அம்சங்களில் ஒன்று வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வரவுகள் வீழ்ச்சியடைந்தமையாகும். வேளாண்மைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே ஏமாற்றம்தரும் இச் செயலாற்றத்திற்குப் பொறுப்பான முக்கிய காரணியாகும். 1985 இன் ஏற்றுமதிப் பெறுமதிகளின் மட்டங்களிலிருந்து தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 23 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம்) வீழ்ச்சியடைந்த வேளையில் தெங்கின் பெறுமதி 23 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இறப்பர், சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான வரவுகள் ரூபா நியதிகளில் முறையே 2 சதவீத, 10 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த போதிலும் அவை சிஎஉ நியதிகளில் முறையே 14 சதவீதத்தாலும் 8 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 11 ஆண்டுகளில் மிக உயர்ந்த மட்டமான 1985 இன் 1980 இலட்சம் கிலோக்கிறும்களிலிருந்து 1986 இல் 2,078 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு 5 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் தேயிலை ஏற்றுமதி வரவுகளில் குறைவு ஏற்பட்டது. விலைகளில் ஏற்பட்ட குறைப்பு, ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பின் சாதகமான தாக்கத்தினை கூடுதலாக எதிரீடு செய்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை கிலோக்கிறுமுக்கு 1985 இன் ரூ. 60.62 இலிருந்து (சிஎஉ 2.19) 1986 இல் ரூ. 44.52 இற்கு (சிஎஉ 1.35) வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.30

## ஏற்றுமதிகளின் அமைப்பு 1984 — 1986

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1986 (ஈ) | 1984 | 1985 | 1986 | 1984 | 1985 | 1986 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் .. | 22,575 | 19,026 | 15,764 | 866 | 689 | 479 | 60.4 | 52.5 | 46.3 |
| 1.1 தேயிலை .. | 15,764 | 12,003 | 9,253 | 605 | 434 | 281 | 42.2 | 33.1 | 27.2 |
| 1.2 இறப்பர் .. | 3,301 | 2,566 | 2,622 | 127 | 93 | 80 | 8.8 | 7.1 | 7.7 |
| 1.3 தெங்கு .. | 2,118 | 3,093 | 2,389 | 81 | 112 | 73 | 5.7 | 8.5 | 7.0 |
| 1.3.1 உள்ளீட்டுஉற்பத்திகள் .. | 1,553 | 2,383 | 1,609 | 60 | 86 | 49 | 4.2 | 6.7 | 4.7 |
| 1.3.2 ஏனையவை .. | 566 | 710 | 780 | 22 | 26 | 24 | 1.5 | 2.0 | 2.3 |
| 1.4 சிறு வேளாண்மை உற்பத்திகள் (அ) (ஆ) .. | 1,391 | 1,365 | 1,500 | 53 | 49 | 46 | 3.7 | 3.8 | 4.4 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) .. | 12,918 | 14,295 | 15,878 | 495 | 517 | 483 | 34.6 | 39.5 | 46.6 |
| 2.1 புடவையும் ஆடைகளும் .. | 7,566 | 7,960 | 9,629 | 290 | 288 | 293 | 20.3 | 22.0 | 28.3 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் .. | 3,288 | 3,877 | 2,358 | 126 | 140 | 72 | 8.8 | 10.7 | 6.9 |
| 2.3 ஏனையவை .. | 2,064 | 2,459 | 3,891 | 79 | 89 | 118 | 5.5 | 6.8 | 11.4 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் .. | 834 | 864 | 1,182 | 32 | 31 | 36 | 2.2 | 2.4 | 3.5 |
| 3.1 இரத்தினக் கற்கள் .. | 617 | 561 | 755 | 24 | 20 | 23 | 1.6 | 1.6 | 2.2 |
| 3.2 ஏனையவை ... | 217 | 303 | 427 | 8 | 11 | 13 | 0.6 | 0.8 | 1.3 |
| 4. பகுக்கப்படாதவைகள் (இ) ... | 1,020(உ) | 2,021(உ) | 1,249 | 39 | 73 | 38 | 2.7 | 5.6 | 3.7 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 37,347 | 36,207 | 34,072 | 1,432 | 1,311 | 1,036 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள்.
(ஆ) சீராக்கப்பட்டவை.
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(ஈ) தற்காலிகமானவை.
(உ) வான்கலன் ஒன்றின் ஏற்றுமதி உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்.

மாற்றல்— 1984 — 1 சிஎஉ = ரூ. 26.08
1985 — 1 சிஎஉ = ரூ. 27.63
1986 — 1 சிஎஉ = ரூ. 32.90

1985 இன் முற்பகுதியிலிருந்து உலக சந்தைகளில் தேயிலை விலைகளில் படிப் படியான வீழ்ச்சிபோக்குக் காணப்பட்டதுடன், இது கொழும்பு ஏல விலை களிலும் பிரதிபலிக்கப்பட்டது. ரூபாவின் பெறுமதி குறைவடைந்தபோதிலும் இதன் சராசரி விலை கிலோக்கிராமுக்கு ரூ. 39.01 இலிருந்து 1986 இல்கிலோக் கிராமுக்கு ரூ. 30.68 ஆக 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலைகளின் சராசரி விலை இதே காலப் பகுதியில் ஒரு கிலோக்கிராமுக்கு 155.65 பென்சிலிருந்து ஒரு கிலோக்கிராமுக்கு 115.67 பென்சாக 26 சதவீதத்தினால் அதிகளவில் வீழ்ச்சியடைந்தது.

இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 1985இன் 1,200இலட்சம் கிலோக்கிராம்களி லிருந்து 1986 இல் 1,100 இலட்சம் கிலோக்கிராம்களுக்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சராசரி கஏபெ விலையும் 1985 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு சிஎஉ 0.77 இலிருந்து 1986 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு 0.72 இற்கு 6 சதவீதத் தினால் வீழ்ச்சியடைந்தது. ரூபா நியதிகளிலான இறப்பரின் சராசரி கஏபெ விலை 1985 இல் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 21.34 இலிருந்து 1986 இல் கிலோக் கிராம் ஒன்றுக்கு ரூ. 23.83 ஆக 12 சதவீதத்தினால் அதிகரித்தது. 1986 இல் இறப்பரிலிருந்து கிடைத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூபாய் நியதிகளில் ரூ. 25,660 இலட்சத்திலிருந்து ரூ. 26,220 இலட்சத்திற்கு 2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சிஎஉ நியதிகளில் இவ்வரவுகள் 1985இன் சிஎஉ 930 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 800 இலட்சத்திற்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

தெங்கு உற்பத்தியிலிருந்து கிடைத்த வரவுகள் 1985 இன் ரூ. 30,930 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,120 இலட்சம்) 1986 இல் ரூ. 23,890 இலட்சத் திற்கு (சிஎஉ 730 இலட்சம்) 23 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம் வீழ்ச்சியடைந்தன. தெங்கு உள்ளீட்டுப்பொருட்களின் ஏற்றுமதிகளின் பெறு மதி 1985 இல் ரூ. 23,830 இலட்சத்திலிருந்து (சிஎஉ 860 இலட்சம்) 1986 இல் ரூ. 16,090 இலட்சத்திற்கு (சிஎஉ 490 இலட்சம்) 32 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 43 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இது முற்றாக மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளினதும் அதாவது தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய், தேங்காய்த்துருவல் என்பவற்றின் (கஏபெ) விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியினால் எற்பட்டதாகும். இது ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 18 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினையும்விட மிகவும் கூடுதலாக இருந்தது. தெங்கு துணை உற்பத்திகளிலிருந்து கிடைத்த வரவுகள் 1985 இன் ரூ. 7,100 இலட்சத்திலிருந்து 1986 இல் ரூ. 7,800 இலட்சத்திற்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும் சிஎஉ நியதிகளில் இத்தகைய வரவுகள் சிஎஉ 260 இலட் சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 240 இலட்சத்திற்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தது.

1972 இன் 12,480 இலட்சம் தேங்காய்களுக்குச் சமமான ஏற்றுமதி களுக்குப்பின் தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் தேங்காய்க்குச் சமமான ஏற்று மதிகள் 11,050 இலட்சமாக அமைந்து மிகவும் கூடுதலாக விளங்கின. எனினும் தேங்காய்க்குச் சமமான உள்ளீட்டுப் பொருட்களின் ஏற்றுமதி விலை அரைப் பங்கிற்கும் மேலாக 1985 இன் ரூ. 2.54 (சிஎஉ 0.09) இலிருந்து 1986 இல் ரூ. 1.46 (சிஎஉ. 0.04) இற்கு 43 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 56 சதவீதம்) கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளிலும் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்த சிறு வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வரவுகள் 1986 இல் 10 சதவீத அதிரிப்பைப் பதிவுசெய்தன. எனினும் சிஎஉ நியதிகளில் இவ்வேற்றுமதிகளிலிருந்து கிடைத்த வரவுகள் 8 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. சிஎஉ நியதிகளிலான வரவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த உற்பத்திகளாக பழங்கள், கோப்பி, ஏலக்காய், எள்ளு, ஏனைய எண்ணெய்விதைகள், கொக்கோ தயாரிக்கப்படாத புகையிலை, பப்பாளிப்பால் என்பன விளங்கின.

1986 இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் ரூபா நியதிகளில் 11 சதவீதம் கூடுதலான வரவினைப் பெற்றன. ஆனால் சிஎஉ நியதிகளில் இவ்வரவுகள் 7 சதவீதம் குறைவாக விளங்கின. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1985 இன் ரூ. 142,950 இலட்சத்துடன் (சிஎஉ 5,170 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 158,780 இலட்சமாக (சிஎஉ 4,830 இலட்சம்) விளங்கியது. ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வரவுகள் 21 சதவீதத்தினால் அதிகரித்தது. (ஆனால் சிஎஉ நியதிகளில் 2 சதவீதம் மட்டும்) 1985 இன் ரூ. 79,600 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,880 இலட்சம்) ரூ. 96,290 இலட்சத்தினை (சிஎஉ 2,930 இலட்சம்) அடைந்தது.

ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் 1985 இன் ரூ. 24,590 இலட்சத்திலிருந்து (சிஎஉ 890 இலட்சம்) 1986 இல் ரூ. 38,910 இலட்சத்திற்கு (சிஎஉ 1,180 இலட்சம்) அதிகரித்து விரும்பத்தக்க வளர்ச்சிவீதமான 58 சதவீதத்தினைப் (சிஎஉ நியதிகளில் 33 சதவீதம்) பதிவுசெய்தன. இவ்வகுப்பைச் சார்ந்த ஏற்றுமதிகளின் ஊக்கமளிக்கும் செயலாற்றம் முக்கியமாக வைரக்கல் ஏற்றுமதிகள், 1985 இல் ரூ. 3,130 இலட்சத்திலிருந்து (சிஎஉ 110 இலட்சம்) 1986 இல் ரூ. 10,470 இலட்சத்திற்கு (சிஎஉ 320இலட்சம்) அதிகரித்து மூன்று மடங்கு அதிகரிப்பைப் பதிவுசெய்தமையினால் ஏற்பட்டதாகும். எனினும், ஆடைகள் புடவைகளினது ஏற்றுமதிகளினதும் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளினதும் வளர்ச்சியானது பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி 1985 இன் ரூ. 38,770 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,400 இலட்சம்) 1986 இல் ரூ. 23,580 இலட்சத்திற்கு (சிஎஉ 720 இலட்சம்) 39 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 49 சதவீதம்) கணிசமாக வீழ்ச்சியடைந்தமையினால் இல்லாமல் செய்யப்பட்டது. இவ்வீழ்ச்சி முற்றாக விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும்.

**இறக்குமதிகள்**

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1985 இன் ரூ. 540,490 இலட்சத்துடன்* (சிஎஉ 19,560 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 546,090 இலட்சமாக (சிஎஉ 16,600 இலட்சம்) விளங்கியது. இது ரூபா நியதிகளில் 1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பாகும். ஆனால் சிஎஉ நியதிகளில் 15 சதவீதம் குறைவானதாகும். இவ்வீழ்ச்சி இடைநிலைப் பொருட்கள் முதலீட்டுப் பொருட்கள் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது.

---

* 1985 இன் இறக்குமதிகள் தொடர்பான சுங்கத்தரவு ரூ. 11,320 இலட்சம் (சிஎஉ 410 இலட்சம்) கொண்ட பகுக்கப்படாத இறக்குமதிகளை உள்ளடக்கும் வகையில் மேலும் சீராக்கப்பட்டது. இதன்படி ரூ. 539,170 இலட்சம் கொண்ட (சிஎஉ 19,150 இலட்சம்) இறக்குமதி எண் தொகை ரூ. 540,490 இலட்சத்திற்கு (சிஎஉ 19,560 இலட்சம்) மேல்நோக்கித் திருத்தியமைக்கப்பட்டது.

## அட்டவணை 1.31

## இறக்குமதிகளில் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சிஎஉ. பத்து இலட்சம் | | | மொத்த சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 (அ) | 1986 (ஆ) | 1984 | 1985 | 1986 | 1984 | 1985 | 1986 |
| 1. நுகர்வுப் பொருட்கள் .. | 11,052 | 14,261 | 18,609 | 423.8 | 516.2 | 565.9 | 23.2 | 26.4 | 34.1 |
| 1.1 உணவும் குடிபானமும் .. | 4,986 | 5,906 | 6,746 | 191.2 | 213.8 | 205.0 | 10.5 | 10.9 | 12.3 |
| 1.1.1 அரிசி .. | 197 | 1,089 | 1,052 | 7.5 | 39.4 | 32.0 | 0.4 | 2.0 | 1.9 |
| 1.1.2 மா .. | 28 | 206 | 90 | 1.1 | 7.5 | 2.7 | 0.1 | 0.4 | 0.2 |
| 1.1.3 சீனி .. | 1,346 | 1,985 | 1,764 | 51.6 | 71.8 | 53.6 | 2.8 | 3.7 | 3.2 |
| 1.2 புடவையும் துணிகளும் .. | 2,974 | 3,799 | 6,353 | 114.0 | 137.5 | 193.1 | 6.2 | 7.0 | 11.6 |
| 1.3 ஏனையவை .. | 3,092 | 4,556 | 5,510 | 118.6 | 164.9 | 167.5 | 6.5 | 8.4 | 10.1 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 23,749 | 25,532 | 22,314 | 910.7 | 924.2 | 678.3 | 50.0 | 47.2 | 40.9 |
| 2.1 பெற்றோலியம் .. | 10,681 | 10,986 | 6,293 | 409.6 | 397.6 | 191.3 | 22.5 | 20.3 | 11.5 |
| 2.2 வளமாக்கி .. | 1,103 | 1,579 | 1,282 | 42.3 | 57.2 | 39.0 | 2.3 | 2.9 | 2.4 |
| 2.3 இரசாயனம் .. | 1,028 | 902 | 1,587 | 39.4 | 32.6 | 48.2 | 2.2 | 1.7 | 2.9 |
| 2.4 கோதுமை .. | 2,471 | 2,765 | 2,370 | 94.8 | 100.1 | 72.0 | 5.2 | 5.1 | 4.3 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் .. | 12,170 | 10,387 | 10,556 | 466.7 | 376.0 | 320.9 | 25.6 | 19.2 | 19.3 |
| 3.1 பொறியும் கருவியும் .. | 5,335 | 4,769 | 5,828 | 204.6 | 172.6 | 177.1 | 11.2 | 8.8 | 10.7 |
| 3.2 போக்குவரத்துக் கருவி ... | 3,031(இ) | 2,499(இ) | 1,457 | 116.2 | 90.5 | 44.3 | 6.4 | 4.6 | 2.7 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 727 | 899 | 907 | 27.9 | 32.5 | 27.6 | 1.5 | 1.7 | 1.7 |
| 4. பகுக்கப்படாதவை ... | 570 | 3,868 | 3,130 | 21.8 | 140.0 | 95.1 | 1.2 | 7.2 | 5.7 |
| மொத்த இறக்குமதிகள் (ஈ) ... | 47,541 | 54,049 | 54,609 | 1,823.0 | 1,956.4 | 1,659.9 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சுங்கக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிராத வான்கலன்கள், கப்பல் களின் பெறுமதியை உள்ளடக்குகிறது.
(ஈ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்,
ஏனைய முதன்மை இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா,
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

முந்திய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து 1986 இலும் இறக்குமதிகளின் உள்ளடக்கம் மேலும் மாற்றமடைந்தது. 1984 இல் 23 சதவீதமாகவிருந்து 1985 இல் 26 சதவீதமாக அதிகரித்த நுகர்வோர் பொருட்களின் பங்கு 1986 இல் மேலும் 34 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது ஓரளவிற்கு உள்நாட்டு நுகர்வுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகவும் தாங்கிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்காகவும் நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி அதிகரிக்கப்பட்டமையினால் ஏற்பட்டதாகும். மொத்த இறக்குமதிகளில் இடைநிலைப் பொருட்களின் பங்கு 1985 இன் 47 சதவீதத்திலிருந்து 41 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இடைநிலைப் பொருட்களின் பங்கில் ஏற்பட்ட குறைப்பு முக்கியமாக எண்ணெயின் உலக விலைகள் வீழ்ச்சியடைந்தமையினால் பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி கணிசமாகக் குறைவடைந்தமை காரணமாக ஏற்பட்டதாகும். முதலீட்டுப் பொருட்களின் பங்கு முந்திய ஆண்டின் 19.2 சதவீதத்திலிருந்து 19.3 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. இவ்வகுப்பில் பொறிகளும் உபகரணங்களும் நீங்கலான எல்லா விடயங்களும் 1986 இல் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

1986 இல் முதலீட்டுப் பொருட்களின் மொத்தச் செலவு ரூ. 105,560 இலட்சமாக (சிஎஉ 3,210 இலட்சம்) விளங்கியது. இது 1985 இன் ரூ. 103,870 இலட்சத்துடன் (சிஎஉ 3,760 இலட்சம்) ஒப்பிடத்தக்கதாக அமைந்து ரூபா நியதிகளில் 2 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பையும் சிஎஉ நியதிகளில் 15 சதவீதம் கொண்ட வீழ்ச்சியையும் காட்டியது. 1986 இல் போக்குவரத்து உபகரணங்களின் இறக்குமதி ரூ. 14,570 இலட்சமாக (சிஎஉ 440 இலட்சம்) அமைந்து 42 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 51 சதவீதம்) கணிசமாகக் குறைவடைந்து காணப்பட்டது. பொறித் தொகுதிகள், கருவிகளின் இறக்குமதிகள் 3 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்த வேளையில் கட்டடப் பொருட்கள் 15 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில்) வீழ்ச்சியடைந்தன.

1986 இன் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு முந்திய ஆண்டின் ரூ. 255,320 இலட்சத்துடன் (சிஎஉ 9,240 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 223,140 இலட்சமாக (சிஎஉ 6,780 இலட்சம்) விளங்கி 13 சதவீத வீழ்ச்சியை (சிஎஉ நியதிகளில் 27 சதவீதம்) பதிவுசெய்தது. பெற்றோலியம், கோதுமைத்தானியம், வளமாக்கி போன்ற இடைநிலைப் பொருட்கள் மீதான செலவு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. ரூ. 62,930 இலட்சமாக விளங்கிய பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி (சிஎஉ 1,910 இலட்சம்) முந்திய ஆண்டினதைவிட அரைப்பங்கிலும் குறைவாக விளங்கியது. இது பெரும்பாலும் மசகு எண்ணெயின் உலகவிலை 1985 இல் பீப்பா ஒன்றுக்கு ஏறக்குறைய சிஎஉ 28 இலிருந்து 1986 இல் பீப்பா ஒன்றுக்கு ஏறக்குறைய சிஎஉ 13 இற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். மசகு எண்ணெய் இறக்குமதிகளின் அளவும் 1985 இன் 122 இலட்சம் பீப்பாக்களிலிருந்து 1986 இல் 121 இலட்சம் பீப்பாக்களுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. கோதுமைத் தானிய இறக்குமதிகளின் பெறுமதி 1985 இன் ரூ. 27,650 இலட்சமாகவிருந்து (சிஎஉ 1,000 இலட்சம்) 1986 இல் ரூ. 23,700 இலட்சத்திற்கு (சிஎஉ 720 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. எனினும் கோதுமைத் தானிய இறக்குமதிகளின் அளவு 1985 இன் 665,000 தொன்களிலிருந்து ஆய்வுக்குரிய ஆண்டில் 681,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. எனவே, இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி முற்றாக சராசரி இறக்குமதி விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு இரு ஆண்டுகளுக்கிடையேயும் சிஎஉ 150 இலிருந்து சிஎஉ 106 இற்கு வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதா

கும். 1986 இல் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைத்தானியத்தில்* குறிப்பிடத்தக்க அளவு தொகை ஏற்றுமதி அதிகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டது. இதற்குச் செலுத்தப்பட்ட சராசரி விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐஅடொ 77 ஆக அமைந்து சந்தை விலைகளைவிடக் கணிசமானளவு குறைவாகக் காணப்பட்டது.

### அட்டவணை 1.32

### முக்கிய இறக்குமதிகளின் அளவு 1986

மெற்றிக் தொன்கள்

| மாதம் | | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | ... | 39,200 | — | 31,320 | 65,961 | 11,617 |
| பெப்புருவரி | ... | 19,497 | 95,911 | 32,017 | 125,495 | 26,512 |
| மாச்சு | ... | 20,146 | 113,473 | 19,385 | 185,272 | 49,238 |
| எப்பிறல் | ... | 10,060 | — | 19,328 | 155,242 | 26,257 |
| மே | ... | 10,136 | 52,499 | 10,734 | 153,502 | 38,048 |
| யூன் | ... | 10,021 | — | 12,672 | 152,924 | 39,806 |
| யூலை | ... | 39,631 | 104,250 | 45,195 | 29,380 | 54,907 |
| ஓகத்து | ... | 20,349 | 52,500 | 4,950 | 181,555 | 20,481 |
| செத்தெம்பர் | ... | 20,500 | 66,304 | 15,695 | 152,505 | 24,510 |
| ஒற்றோபர் | ... | 21,041 | 163,009 | 34,419 | 185,873 | 12,065 |
| நவெம்பர் | ... | 10,022 | 33,000 | 39,950 | 67,048 | 35,166 |
| திசெம்பர் | ... | 10,396 | — | 56,219 | 183,790 | 39,601 |
| மொத்தம் (அ) | ... | 230,999 | 680,946 | 321,884 | 1,638,547 | 378,208 |

(அ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முக்கிய இறக்குமதியாளர்களும். இலங்கை மத்திய வங்கி.

நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு ரூ. 186,090 இலட்சமாக (ஐஅடொ 5,660 இலட்சம்) அமைந்து முந்திய ஆண்டினைவிட 30 சதவீதத்தினால் (ஐஅடொ நியதிகளில் 10 சதவீதம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு நுகர்வோர் பொருட்களின் எல்லா முக்கிய வகுப்புகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. புடவைகளும் ஆடைகளும் ஐஅடொ நியதிகளில் மிகக் கூடிய அதிகரிப்பான 40 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. இது பெரும்பாலும் 1985 நவெம்பரில் புடவைகளின்

* ஏற்றுமதி அதிகரிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஏஅநி) ஐ. அ. நாடுகளின் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டமாகும். இதன்கீழ் ஐ.அ. நாடுகளின் அரசினால் கோதுமை ஏற்றுமதியாளருக்கு உதவுதொகை செலுத்தப்படுகின்றது.

இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டமையினல் ஏற்பட்டிருக்கலாம். புடவைகள், ஆடைகளின் இறக்குமதிகள் முந்திய ஆண்டின் ரூ. 37,990 இலட்சத்துடன் (சிஎஉ 1,380 இலட்சம்) ஒப்பிடுகையில் 1986 இல் ரூ. 63,530 இலட்சமாக (சிஎஉ 1,930 இலட்சம்) மதிப்பிடப்பட்டுள்ளன. உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள், நுகர்வோர் பாவனைப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்ற ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் ரூ. 55,100 இலட்சமாக (சிஎஉ 1,680 இலட்சம்) அமைந்து 1985 இனைவிட 21 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 2 சதவீதம்) கூடுதலாக விளங்கின. எனினும் உணவு குடிவகைகளின் இறக்குமதி கள் மீதான செலவு ரூபா நியதிகளில் 14 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்த போதிலும் சிஎஉ நியதிகளில் 4 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தது.

### வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1977 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைகள் 1986 இல் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தன. தீர்வை அமைப் பில் மிதமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலமும் ஏற்றுமதி வளர்ச் சிக்கு வசதியளிப்பதற்கான ஏனைய வழிமுறைகளைப் புகுத்தியதன் மூலமும் மேலும் தாராளமயமாக்கியதனுலும் வர்த்தகக் கொள்கையில் சிறு மாற்றங்கள் செய் யப்பட்டன.

புடவைகளின் வர்த்தகம் தாராளமாக்கப்பட்டதன் முழுத் தாக்கமும் இறக் குமதிகள் கணிசமாக அதிகரித்த 1986 இல் முற்ருக உணரப்பட்டது. கட்டுப் பாட்டிற்குள் இருந்த இவ்விறக்குமதிகள் 1985 நவெம்பரில் தாராளமாக்கப்பட்டு செயற்கைப் புடவைகளுக்கு கொ. கா. க. பெறுமதியில் 100 சதவீதம் அல்லது ஒரு சதுர மீற்றருக்கு ரூ. 40 உம் (இதில் எது கூடியதோ), பருத்திப்புடவைகளுக்கு கொ. கா.க. பெறுமதியில் 100 சதவீதம் அல்லது ஒரு சதுர மீற்றருக்கு ரூ. 25உம் (இதில் எது கூடியதோ) விதிக்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டில் கோதுமைத் தானியம் மீதான இறக்குமதித் தீர்வை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்தது. இது 1984 இல் குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவினல் விதந்துரைக்கப்பட்டவாறு கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதித் தீர்வையை 25 சதவீதத்தினல் உயர்த்து வதற்கான முதற்படியாகும். உலக எண்ணெய் விலை உயர்வின் காரணமாகப் பின்பற்றப்பட்ட தேசிய வலுக் கொள்கைகளின் சீர்குலைவுகளைத் தடுக்கக்கூடிய வகையில் மசகு எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வை 1986 மாச்சில் 20 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. உலக விலைகள் கடுமையாக வீழ்ச்சியுற்றபோது 1986 இன் பிற்பகுதியில் தீர்வைக்கான அடிப் படை பெறுமான விகித வீதம் 45 சதவீதம் அல்லது மெற்றிக் தொன்னுக்கு குறிப் பிட்ட வீதமாகிய ரூ. 1,800 ஆகியவற்றில் எது கூடியதோ அதற்கு மாற்றப் பட்டது.

இறக்குமதி செய்யும் நாடுகளினல் விதிக்கப்பட்ட இறக்குமதி அனுமதிப் பங்குகள், எதிரீடுசெய்ய உதவும் தீர்வைகள் போன்ற வர்த்தகக் கட்டுப்பாடுகளி னல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தும் கைத்தொழில் ஏற்றுமதித் துறை 1986 இல் உற்சாகமான தொழிற்பாட்டினைப் பதிவுசெய்தது. ஐக்கிய அமெரிக்க நாடு கள், கனடா, ஐரோப்பிய நாடுகள் ஆகியன புடவை, ஆடைகள், தோல் உற் பத்திகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மீது அதிகரித்துவரும் பாதுகாப்பு முறை களை கையாளுவது காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய

பொருளாதார சமூகம், கனடா, நோர்வே, சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளுக்கான ஏற்றுமதிகள் மீது அனுமதிப்பங்கு கட்டுப்பாடுகள் தொழிற்படுத் தப்பட்டன. 1986 இறுதியில் அனுமதிப்பங்குக் கட்டுப்பாட்டிற்குள் 25 வேறு பட்டவகைப் புடவைகளும் ஆடைகளும் வகைகள் காணப்பட்டன. எனினும் புடவைகள், ஆடைகளின் ஏற்றுமதி மற்றும் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதி களின் உறுதியான அதிகரிப்பு தேசிய ஏற்றுமதிகளின் வலுவான போட்டித்தன் மையையும் முன்னேற்ற வழிமுறைகளின் ஆற்றலையும் எடுத்துக்காட்டின

தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றின் ஏற்றுமதி விலைகளின் மந்தம் 1986 இல் உலகச் சந்தைகளின் பண்டவிலைகளின் கடுமையான வீழ்ச்சியுடன் இசைவாகக் காணப்பட்டது. பொய்யான தீவிர பிரச்சாரங்களினுல் குறிப்பாக தேயிலை ஏற்றுமதிகளை நஞ்சூட்டுவது என்ற பிரிவினைவாதிகளின் பிரச்சாரத்தினுல் நிலைமை மேலும் பாதிக்கப்பட்டது. கொழும்பு ஏல விற்பனையில் இலங்கைத் தேயிலை உலகின் ஏனைய ஏலவிற்பனை நிலையங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் 1986 நவெம்பர் அளவில் முக்கியமாக உலக நிரம்பலில் ஏற்பட்ட குறைவின் காரணமாக தேயிலை விலை கள் உறுதியான நிலையினை அடைந்தன.

1985 இல் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்ட தற்போதைய பன்னுட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை 1987 ஒற்ரோபரில் முடிவடைகின்றது. பன்னுட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கைமீது ஜெனீவாவில் 1986 இல் நடத்தப்பட்ட இறுதிச் சுற்றுப் பேச்சுக்கள் தாங்கிருப்புத் தொழிற்பாடுகளில் முக்கிய மாற்றங்களை நுகர்வு நாடுகள் கோரியதன் காரணமாக தடங்கல் நிலையில் முடி வடைந்தன. மேலும் திட்டமிடப்பட்ட பன்னுட்டு தேயிலை உடன்படிக்கையின் கீழ் அனுமதிப்பங்கு ஒதுக்குகள் பற்றிய விடயம் மீதான ஆலோசனைகள் உற்பத் தியாளர் மத்தியில் 1986 இல் நடத்தப்பட்டன.

### உள்நாட்டு வர்த்தகம்

உள்நாட்டு வர்த்தகக் கொள்கையின் நோக்கம் நியாய வர்த்தகத்தினை மேலும் போட்டி ரீதியான அடிப்படையில் பேணுவதாகும். மொத்த விற்பனை சில்லறை மற்றும் பண்டங்கள் பணிகள் மீதான வர்த்தகம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளில் தனியார்துறை பங்களிப்பு ஊக்குவிக்கப்பட்டது. அரச தலை யீடு அதிகுறைந்த மட்டத்தில் பேணப்பட்டதோடு இதன் நோக்கம் போட்டி யினைப் பாதுகாக்கவும் தனியுரிமை ஏற்படுவதைத் தடுப்பதுமாகும். அரச வர்த் தக நிறுவனங்களும் ஓரளவு விலை உறுதிப்பாட்டினையும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் போதுமானளவு நிரம்பலையும் பேணுவதற்கும் நுகர்வோர் நலன் களைப் பாதுகாப்பதற்கும் வேண்டப்பட்டன.

தேசிய விலைகள் ஆணைக்குழு முன்னைய ஆண்டின் 58 விலை மீளாய்வுகளுடன் ஒப்பிடு கையில் 1986 இல் 56 விலை மீளாய்வுகளை மேற்கொண்டது. இம் மீளாய் வுகளின் நோக்கம் விலைகளை ஒழுங்கு முறைப்படுத்துவது மட்டுமின்றி விலை மாற்றங்களுக்கான காரணங்களை மீளாய்வதன்மூலம் நுகர்வோர், உற்பத்தியாளர் இருவரினதும் நலன்களைப் பாதுகாப்பதுமாகும். 1986 நவெம்பரில் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நியாய வர்த்தக ஆணைக்குழு சட்டமூலம் தேசிய விலைகள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக நியாய வர்த்தக ஆணைக்குழுவினை அமைப் பதற்கு சிறப்பு ஏற்பாடுகளை வழங்கியது. திட்டமிடப்பட்ட ஆணைக்குழு தேசிய

விலைக் கொள்கைகளை வகுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக விளங்குவதுடன் தனியுரிமைகள், இணைப்புக்கள், போட்டிக்கெதிரான வழி முறைகள் போன்றவற்றை கையாளுவதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

1986 இல் பல அரச வர்த்தக நிறுவனங்கள் குறைந்தளவு மொத்த விற்பனை களைப் பதிவுசெய்தாலும் அவை தனியார் வர்த்தகர்களின் அதிகரித்துவரும் போட்டிக்கு மத்தியில் அவற்றின் வர்த்தக ரீதியான ஆற்றலை உறுதிப்படுத்தும்நோக் குடன் பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளிலீடுபட்டன. நாட்டின் பாதுகாப்பு நிலைமையினைக் கருத்திற்கொண்டு அத்தியாவசியப் பண்டங்களின் தாங்கிருப்புக் களை பேணுவதற்கு வங்கித் தொழில் முறையினூடாக கூட்டுறவு மொத்த விற் பனை நிறுவனத்திற்கு அதிகரித்த நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டில் சில்லறைப் பண்டங்களின் விநியோகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட வலையமைப்பாக தொடர்ந்தும் விளங் கியது. அண்மைய ஆண்டுகளில் குழப்ப நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கை யாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விரைவான விநியோகம் அவசிய மாகும் போது இந்நிறுவனங்களின் முக்கியத்துவத்தைக் காணக்கூடியதாக இருந் தது. மற்றைய வேளையில். உணவு முத்திரைத் திட்டத்தின் கீழான அத்தியா வசிய நுகர்வுப்பொருட்களின் விநியோகத்துக்கே பெரும்பாலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தொழிற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டடிருந்தன.

## சுற்றுலா

1983 இல் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து சுற்றுலாக் கைத் தொழிலின் நடவடிக்கைகள் 1986 இல் மேலும் பின்னடைந்தன. இது மீளாய் விற்குரிய ஆண்டில் சுற்றலா வருகைகளின் எண்ணிக்கை சுற்றுலா இரவுகள், அறைகளில் தங்குதல், வருவாய்கள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டது.

அட்டவணை 1.33

**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1985 – 1986**

| விடயம் | 1985 | % மாற்றம் 1984 மேல் | 1986 | 1985 இற்குமேல் % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ... | 257,456 | — 18.9 | 230,106 | — 10.6 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் ... | 9,882 | 14.9 | 6,266 | — 36.6 |
| 3. பயணி இரவுகள் ('000) ... | 2,365 | — 15.9 | 2,437 | 3.0 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூபா பத்து இலட்சங்களில் ... | 2,007 | — 24.8 | 2,000(அ) | — 0.4 |
| 4.2 டொலர் பத்து இலட்சம் ... | 74.0 | — 29.4 | 71.4 | — 3.5 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சம் ... | 72.6 | — 29.1 | 60.8 | — 16.2 |
| 5. நோக்கங்களின்படியான வரவுகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 234,038 | — 22.0 | 216,148 | — 7.6 |
| 5.2 வியாபாரம் தொடர்பான ... | 18,214 | 66.5 | 10,084 | — 44.6 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 153,004 | — 19.8 | 143,022 | — 6.5 |
| 6.2 ஆசியா ... | 79,056 | — 12.3 | 66,150 | — 16.3 |
| 6.3 வட அமெரிக்கா ... | 10,358 | — 27.2 | 9,232 | — 10.9 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 54,533 | — 7.4 | 48,000 | — 11.9 |
| 7.1 நேரடியாக ... | 22,723 | — 7.4 | 20,000 | — 11.9 |
| 7.2 மறைமுகமாக ... | 31,810 | — 7.4 | 28,000 | — 11.9 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை.

1986 இல் மொத்த சுற்றுலா வருகைகள் 230,106 ஆக விளங்கியதுடன் இது 1978 இன் பின்னர் ஏற்பட்ட மிகக் குறைந்த தொகையாக அமைந்து 1985 உடன் ஒப்பிடுகையில் 11 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 1982 இன் 407,230 சுற்றுலா வருகைகளைக் கொண்ட உச்ச மட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்குரிய ஆண்டின் வருகைகள் 43 சதவீதம் குறைவாக இருந்தன. இலங்கையின் பாதுகாப்பு நிலைமைபற்றி வெளிநாடுகளில் நிலவிய பாதகமான விளம்பரங்களே சுற்றுலா வருகைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சி யடைந்தமைக்குப் பொறுப்பாக இருந்த முதன்மைத் காரணியாகும்.

வீழ்ச்சி அனைத்துப் பிரதேசங்களுக்கிடையேயும் பரந்து காணப்பட்டது. கடந்த காலத்தைப்போன்று மேற்கு ஐரோப்பா தொடர்ந்தும் முதன்மைச் சந்தையாக விளங்கி மொத்த சுற்றுலா வருகையில் 62 சதவீதத்திற்கு வகை கூறியதெனினும் இப்பிரதேசத்திலிருந்தான வருகை 7 சதவீதத்தினுல் வீழ்ச்சி யடைந்து மொத்த வருகையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கையிலிருந்து திரும்பிச் செல்லும் இந்திய மக்களுக்கு வழங்கப்பட்ட தீர்வை யற்றபடி தொடர்பாக 1984 இல் மிகக்கடுமையான ஒழுங்குவிதிகள் இந்திய அரசினுல் விதிக்கப்பட்டதன் காரணமாக இந்தியாவிலிருந்தான வருகைகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக இரண்டாவது பெரும் சந்தை யான ஆசியாவிலிருந்தான சுற்றலா வருகைகள் 1986 இல் 16 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. வட அமெரிக்கா, அவுத்திரலாசியா, கிழக்கு ஐரோப்பா போன்ற ஏனைய முக்கிய சந்தைகளிலிருந்தான வருகைகள் முறையே 11 சத வீதத்தினுலும் 28 சதவீதத்தினுலும் 10 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தன.

1986 இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 20,000 இலட்சம் (சிஎஉ 610 இலட்சம்) என இலங்கைச் சுற்றுலாச்சபை மதிப்பிட்டுள்ளதுடன் இது 1980 இன் பின்னர் பெறப்பட்ட மிகக் குறைந்த தொகையுமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூபா நியதிகளில் சிறிதளவான வீழ்ச்சியும் (0.4 சதவீதம்) சிஎஉ நியதிகளில் 16 சதவீதமான வீழ்ச்சியையும் எடுத்துக்காட்டியது. 1982 இல் பெறப்பட்ட சிஎஉ 1,330 இலட்சம் கொண்ட உச்ச மட்டவருவாயுடன் ஒப்பிடுகையில் 1986 இன் வருவாய்கள் 54 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின.

நாட்டிற்கான சுற்றுலாவருகையின் முதன்மை நோக்கம் தொடர்ந்தும் களியாட்டமாகவே இருந்ததுடன் இது 1986 இன் மொத்த வருகைகளில் 94 சதவீதத்திற்கு வகைகூறியது. வியாபார நோக்கங்களுக்கான வருகைகள் 45 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்த வேளையில் சமூக, சமய, காலச்சார மற்றும் கல்வி போன்ற ஏனைய நோக்கங்களுக்கான வருகைகள் 1985 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. இன்பப் பயணிகளின் (தற் காலிக விருந்தினர்) வருகை 37 சதவீதமான வீழ்ச்சியைக்காட்டியது.

கடந்த காலங்களைப்போன்றே 1986 இலும் இலங்கைக்கான சுற்றுலாப் பயணத்தரின் போக்குவரத்து முறையாக தொடர்ந்தும்வான்வழியே விளங்கியது இம்முறையின் மூலமான மொத்த வருகையில் அட்டவணையிடப்பட்ட பிரதேசங் களுக்குள்ளேயான, பிரதேசங்களுக்கிடையேயான பறப்புக்கள் மூலமான வருகை கள் 80 சதவீதத்திற்கு வகைகூறிய வேலையில் ஒப்பந்த அடிப்படையிலான பறப் புக்கள் 20 சதவீதமான வருகைகளைக் கொண்டிருந்தன. தலைமன்னுர் இறங் குதுறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமையின் காரணமாக கடல் வழி யான சுற்றுலா வருகை தொடர்ந்தும் மிகக்குறைவாகவே இருந்தது.

சுற்றுலாக் கைத்தொழிலினுல் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டிலும் பாதிக்கப்பட்டன. 1986 இல் இத்துறையில் தொழிலாற்றியோரின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் தொழில் நிலையான 54,533 உடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 48,000 ஆக மதிப்டப்பட்டு 12 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. 1986 இல் தொழிலி லிருந்தோரின் எண்ணிக்கையில் எறத்தாழ 20,000 பேர் நேரடித் தொழில் வாய்ப்பில் இருந்த வேளையில் ஏறத்தாழ 28,000 பேர் துணைத்துறையில் தொழி லாற்றினர்.

தரப்படுத்தப்பட்ட தங்குமிட வகையின் இயலளவு 1985 இன் 143 அலகு களிலிருந்து 1986 இல் 127 அலகுகளுக்கு வீழ்ச்சியடைந்தது. இது தரப்படுத்தப் பட்ட தங்குமிடவகையில் ஏற்பட்ட 16 சதவீதமான வீழ்ச்சியாகும். இதற்கு கிழக்குக் கரையோரத்தின் 13 தரப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் 12 மூடப் பட்டதே முக்கிய காரணமாகும். சுற்றுலா விடுதிகளின் இயலளவுப் பயன்பாடு விரும்பத்தக்க மட்டத்திற்கு மிகக்கீழேயே காணப்பட்டது. எனினும் தரப்படுத்தப் பட்ட சுற்றுலா விடுதிகளில் சராசரி அறையில் தங்கும் வீதம் 1985 இன் 32.7 சத வீதத்திலிருந்து 1986 இல் 33.1 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவால் அதிகரித்தது. இது சுற்றுலாவிடுதிகள் மூடப்பட்டமையின் காரணமாக சுற்றுலா விடுதி அறை களின் எண்ணிக்கை குறைவடைந்தமையைக் காட்டிலும் அறையில் தங்கும் வீதம் முன்னேற்றமடைந்தமையின் விளைவாக பெருமளவிற்கு ஏற்பட்டதாகும்.

வடபகுதியிலும், கிழக்குக் கரையோரத்திலுமுள்ள சுற்றுலா விடுதிகள் பெரும் பாலும் பயன்படுத்தப்படாமல் இருந்தவேளையில் பண்டைய நகரப் பிரதேசங்களில் மிகக்குறைந்த தங்கல் மட்டம் காணப்பட்டது. எனினும் கொழும்பு நகரம், கொழும்பு பெரும் பாகம், தென்கரையோரப் பிரதேசங்கள் மிதமான தங்கல் மட்டத்தைப் பேணின.

1983 இன் பிற்பகுதியிலிருந்துவரும் சுற்றுலா விடுதித்துறைக்கு காலத்திற் குக் காலம் அரசினுல் வழங்கப்பட்டுவரும் பெருமளவு நிவாரண வழிமுறைகள் 1986 ஆம் ஆண்டு முழுவதும் நடைமுறையில் இருந்தன. இவ் வழிமுறைகள் ஏனைய விடயங்களுடன் சுற்றுலா விடுதிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீள் அட்டவணைப்படுத்துவதற்கான திட்டத்தையும் உள்ளடக்கும். சுற்றுலா நடவடிக் கைகளில் காணப்படும் தொடர்ச்சியான மந்த நிலையைக் கருத்திற்கொண்டு பின்னர் அனுமதிக்கப்பட்ட 80 சதவீதத்திற்கெதிராக கடன்களின் 100 சதவீத மான மீள் அட்டவணைப்படுத்துதலைக் கொண்ட மேலுமொரு சலுகையுடன் தொடக்கத்தில் வழங்கப்பட்ட 1987 வரையான இரண்டாண்டுகள் சட்டரீ தியான கால அவகாசம் 1989 மாச்சுவரை நீடிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சுற் றுலா விடுதிகளின் தொழிற்படு மூலதனத்தேவைகளை ஈடுசெய்வதற்காக வட்டி யற்ற கடன்வசதிகள் அரசினுல் வழங்கப்பட்டன.